**<u>அறிவிக்கை எண்.01/2025 (சார்பு ஆய்வாளர் - 2025) தேதி:30.04.2025 கல்வித் தகுதி தொடர்பான தெளிவுபடுத்துதல்</u>**

WMP (MD) எண்.8995 / 2025, WP (MD) எண்.12244 / 2025-ல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வில் 24.04.2025 அன்று பிறப்பித்த உத்தரவின்படி, 9 - ஆம் வகுப்பு பயிலாமல் நேரடியாக 10 - ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மற்றும் 11 - ஆம் வகுப்பு பயிலாமல் நேரடியாக 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மனுதாரர்களின் இணையவழி / நேரடி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ள TNUSRB-க்கு இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேற்கூறிய உத்தரவை தொடர்ந்து அதே நிலையில் உள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தளர்வை நீட்டிக்க இவ்வாரியம் முடிவு செய்துள்ளது. இருப்பினும், அவர்களின் தேர்வு நடைமுறைகள் மேற்கூறிய பேராணையின் இறுதி முடிவுக்கு உட்பட்டது. மேலும் அத்தகைய விண்ணப்பங்கள் மேற்கூறிய பேராணை மீதான இறுதி உத்தரவுகள் கிடைக்கும் வரை தற்காலிகமாக இருக்கும்.

அதன்படி, விண்ணப்பத்திற்கான கால அட்டவணை பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது:

- இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் கடைசி தேதி - 10.05.2025
- சமர்ப்பிக்கப்பட்ட இணையவழி விண்ணப்பத்தை திருத்துவதற்கான கடைசி தேதி - 15.05.2025

காவல்துறை தலைவர் / உறுப்பினர் செயலாளர்
தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்